Ladsuminathan Maruthy[1] and Seeni Mohamed Ahamed Lebbe[2]

# யாழ்ப்பாண பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னர் விவசாயத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் (சந்தைப்படுத்தல் பிரச்சினை தொடர்பான ஒரு ஆய்வு)

# Post- War Development in Agricultural Sector in Jaffna District (A Study of Marketing Problems)

(1)Teacher's Lane, Sankaththanai, Chavakachcheri, Jaffna, Sri Lanka.
(email:Maruthyladsuminathan@ymail.com)

(2) Dept. of Social Sciences, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka.
(email: smahamedo8@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்:** வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் தன்னிறைவை அடைந்து கொள்ள உதவும் மிக முக்கிய துறையாக விவசாயத்துறை காணப்படுகின்றது. விவசாயத்துறையில் தன்னிறைவை அடைவதன் ஊடாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் தங்கி வாழ்தலை வெகுவாகக் குறைக்க முடியும். விவசாயத்துறையின் அபிவிருத்தயானது ஒரு நாட்டினுடைய கைத்தொழில் துறையை விருத்தியடையச் செய்வதன் மூலம் குறித்த நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. விவசாயத்துறையானது உணவு, உள்ளீடுகள், மூலதனம் என்பனவற்றை கைத்தொழில்துறைக்கு வழங்குவதன்காரணமாக ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கும் ஒரு துறையாக காணப்படுகின்றது (Ahamed Lebbe, 2010). கடந்த மூன்று தசாப்தகாலத்திற்கும் மேலாக தொடர்ந்த யுத்தம் பொதுவாக இலங்கையின் அபிவிருத்தியை விஷேடமாக யாழ் மாவட்ட அபிவிருத்தியை வெகுவாக பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வின் பிரதான நோக்கம் யுத்தத்தின் பின்னர் தென்மாராட்சிப் பிரதேச விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான நிலைமைகளைக் கண்டறிவதாகும். இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலைத் தரவுகள் நேரடி அவதானம், வினாக்கொத்து, நேர்காணல், கள ஆய்வு ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களாக தென்மராட்சி பிரதேச செயலக கையேடு, கமநல சேவைகள் திணைக்களத்தின் கையேடு, கால்நடை வைத்திய நிலையத்தரவுகள், இணையத்தளங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், நூல்களும் சஞ்சிகைகளும் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவிற்கிணங்க ஆய்வு பிரதேசத்தில் யுத்தத்திற்கு பின்னர் சமாதான சூழல், புவியியல் காரணிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு, அதிகரித்த ஊழியநிரம்பல் போன்ற சாதகமான வாய்ப்புக்கள் காணப்பட்டதன் விளைவாக விவாசாய உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் சந்தைப்படுத்தல் வசதிகளும் முன்னேற்றம் கண்டுள்ளன. என்றாலும், விவசாய நிலங்களில் இராணுவ முகாம் அமைத்தல், நிலக்கண்ணி வெடிகள், நோய்த்தாக்கம், நிறுவனரீதியற்ற மூலங்களிலிருந்து பெறப்படும் கடன்களுக்கு மிக உயர்வான வட்டி, தூர இடங்களில் உள்ள விவசாயிகள் எதிநோக்கும் சிக்கல்கள் போன்றன விவசாயகளால் இன்னும் எதிர்கொள்ளப்படும் சவால்களாகும்.

**Keywords**: விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல, நிறுவனரீதியற்ற மூலம், ஊழியநிரம்பல், சமாதான சூழல்.

## ஆய்வின் அறிமுகம்

பொருளாதாரத்தில் விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை என மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் உணவு உற்பத்தியில் செல்வாக்குச் செலுத்தும் துறையாக விவசாயத்துறை காணப்படுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கும் ஒரு துறை விவசாயத்துறையாகும். விவசாயம் முக்கியமான முதனிலைத் தொழில் ஆகும். நாட்டில் வேறு தொழிலை விடவும் மிக அதிகமானோர் ஈடுபட்டுள்ள தொழிலும் விவசாயமாகும். மேலும் அனைத்து பிற தொழில்களின் வளர்ச்சிக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதாரமாக இருப்பதும் விவசாயமே ஆகும். (http://makkalsakthi.net/index) இத்தொழிலில் மனிதன் இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்களை சேகரித்து பயன்படுத்திக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவ்வியற்கையோடு ஒன்றிணைந்து பணியாற்றி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்துகொள்கிறான். (http://ta.wikipedia.org/s/5vx)

விவசாயத்துறை பொருளாதாரத்தில் ஏனைய துறைகளைப் போல நுகர்வுத்தொழிற்பாடு, சந்தைப்படுத்தல் செயற்பாடு போன்றவற்றை உள்ளடக்கிக் காணப்படும். மனித வரலாற்றில் ஆரம்ப கட்டத்தில் உருவான துறையாக விவசாயத்துறை காணப்படுகின்றது. விவசாயத்துறையின் முதல்படி நிலையானது வெறுமனமே சுயதேவையை முக்கியப்படுத்தியதாகக் காணப்பட்டது. இவ்வாறான நிலை பிற்காலத்தில் மனிதமுயற்சி, அறுவடையில் ஏற்பட்ட அதிகரிப்பு, சிறப்புத்தேர்ச்சி என்பன காரணமாக பிற்காலத்தில் மிகைஉற்பத்தி நிலை காணப்பட வழிவகுத்தது. இவ்வாறான மிகை உற்பத்தியின் காரணமாக பண்டமாற்று முறையானது தோற்றம் பெற்றது. தேவைகளின் பொருந்துகையின்மை, பொருட்களின் பிரிபடாத்தன்மை, களஞ்சியப்படுத்த முடியாமை, பொதுவான பெறுமதி அலகு காணப்படாமை போன்ற குறைபாடு காரணமாக பண்டமாற்று முறை தோல்வி அடைந்தது. பண்டமாற்று முறையில் இருந்து வர்த்தகப்படுத்தப்பட்ட விவசாய முறைமை தோற்றம் பெற்றது. விவசாய முறைமையானது இரண்டு முக்கியமான தேவைகளைக் கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. அதாவது ஒன்று சுயதேவையை மையமாகக் கொண்டது. மற்றயது பணத்தை உழைக்கும் வர்த்தகத்தை மையமாகக் கொண்டது. மனிதனது அடிப்படையான உணவுத்தேவையை நிறைவு செய்வதில் விவசாயத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயம் என்பதனுள் உணவு உற்பத்தி செய்கின்ற பயிர்கள், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, ஏனைய பணப்பயிர்ச் செய்கைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன (கதிரவேலுப்பிள்ளை, 1998).

நிலைத்து நிற்கும் விவசாயம் என்பது உயிரினங்களுக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் சூழலியல் கொள்கைகளின் அடிப்படையில் விவசாயத்தை வடிவமைத்து தொழிற்படல் ஆகும். இது ஒரு குறிப்பிட்ட இடத்தில் தாவர உற்பத்தி, விலங்கு உற்பத்தி ஆகியவற்றை ஒன்றிணைத்து உருவாகும் ஒரு திட்டமாக இருப்பதுடன் இந்த நிலைத்து நிற்கும் விவசாயமானது நீண்டகால இலக்கினை உடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் மனிதனின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாகவும்,, புதுப்பிக்கப்படாத மூலங்களை மிகுந்த வினைத்திறனுடன் அதிகூடிய பயன்பாட்டுக்கு உட்படுத்தவல்லதாகவும், விவசாயத் தொழிற்பாடுகளை பொருளாதார ரீதியில் வாழும் தகுதியுடன் பேணிப் பாதுகாப்பதாகவும் இருத்தல் வேண்டும். மொத்தத்தில் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் சமூகத்தின் வாழ்கைத்தரத்தையும் அதிகரித்தல் அவசியமாகும் (http://ta.wikipedia.org/wiki). ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப் போன்றே இலங்கையும் விவசாயத்துறையில் பெருமளவு தங்கியுள்ள நாடாக காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரமடைந்தபோது விவசாயத்துறை முக்கியம் வகித்ததோடு அதில் ஏற்றுமதித் துறையை அடிப்படையாகக் கொண்ட பெருந்தோட்டதுறையும், பிழைப்பூதிய மட்டத்தில் இடம் பெற்ற விவசாயத்துறையும் முக்கியம் வகிக்கின்றன (அமிர்தலிங்கம், 2008)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்துறை ஆகக்கூடிய முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. இப்போது இத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 12சதவீத பங்களிப்பை வழங்குகின்ற அதேவேளை வேறு எத்துறையிலும் காணமுடியாதவாறு மொத்த ஊழியப்படையில் 34 சதவீதமானோருக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகின்றது. ஏறத்தாழ 1.8 மில்லியன் குடும்பங்கள் நேரடியாக இத்துறையில் தங்கியுள்ளன. வேறு எந்தத் துறையிலும் இல்லாதவாறு இத்துறை ஊழிய ஈடுபாடு மிகுந்ததொன்றாக காணப்படுகின்றது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 6.5 மில்லியன் ஹெக்டயர் பரப்பளவு (37%) விவசாய உற்பத்திக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது (மத்திய வங்கி, 2010). அனேக நாடுகள், விசேடமாக குறைவிருத்தி நாடுகள் தமக்குத் தேவையான அன்னியச்

செலாவணியை விவசாயத் துறையின் மிகையை ஏற்றுமதி செய்வதன் மூலமே பெற்றுக்கொள்கின்றது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல (Norton & Alwang (1963). மேற்கத்தைய நாடுகளின் வரலாற்று ரீதியான அனுபவங்கள் பொருளாதார அபிவிருத்தியானது துரித பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களுடன் தொடர்பு பட்டிருப்பதையும், விவசாயத்துறையிலிருந்து கைத்தொழிற் துறைக்கு பொருளாதாரம் மாற்றமடைந்து முன்னேறி வந்துள்ளமையையும் எடுத்துக்காட்டுகின்றன (Todaro, 2000).

இலங்கை அரசாங்கம் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க உதவி நிறுவனத்தின் உதவியுடன் 1979 இல் விவசாய சந்தைப்படுத்தல் தகவல் முறைமையொன்றை சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி கூறு எனும் வகையில் கமத்தொழில் ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் அறிமுகஞ் செய்தது. இது 1980 இல் சந்தைப்படுத்தல் மற்றும் உணவுக்கொள்கைப் பிரிவு எனவும் 2000 இல் இது சந்தைப்படுத்தல், உணவுக்கொள்கை மற்றும் விவசாய தொழில் முயற்சிப் பிரிவாக மாறியது. (மக்கள் வங்கி, 2010)

கடந்த மூன்று தசாப்தகாலத்திற்கும் மேலாக தொடர்ந்த யுத்தம் பொதுவாக இலங்கையின் அபிவிருத்தியை விஷேடமாக யாழ் மாவட்ட அபிவிருத்தியை வெகுவாக பாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாறாக யுத்தத்தின் பின்னர் இலங்கையில் பரவலாக அபிவிருத்திகள் ஏற்பட்டு வருகின்றன. இவ்வகையில் யாழ் மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேச விவசாய நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, யுத்தத்தின் பின்னர் தென்மாராட்சிப் பிரதேச விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான நிலைமைகள் என்பனவற்றைக் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

## ஆய்வு முறையியலும் தரவுசேகரிப்பும்

இவ் ஆய்விற்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது புதிய தரவுகளை வேண்டி நிற்பதனாலும், மக்களது அபிப்பிராயங்களும் தகவல்களும் பெறவேண்டி இருப்பதனாலும் பின்வரும் அடிப்படையில் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளானது நேர்காணல் முறை, வினாக்கொத்துமுறை, அவதானிப்புமுறை, கலந்துரையாடல்முறை போன்ற முறைகளின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. புவனேந்திரன் (யாழ் மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட செய்கையில் முதலாம் இடம் பெற்றவர்), சிறிகந்தா (கச்சாய் கமநல அதிகாரி), இரகுநாதன் (கால்நடை வைத்திய அதிகாரி) போன்றவர்களிடம் இருந்து நேர்காணல் மூலமாக தகவல் சேகரிக்கப்பட்டது. மற்றும் 100 குடும்பங்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்படுவதன் மூலமும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இங்கு விவசாயிகளிடம் மாத்திரமன்றி விவசாய சம்மேளனத்திடமும் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்..

இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற வகையில் சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், நூல்கள், துண்டுப்பிரசுரங்கள், தென்மராட்சி பிரதேச செயலக கையேடு, கமநல சேவைகள் திணைக்களத்தின் கையேடு, கால்நடை வைத்திய நிலையத்தரவுகள், ஆண்டறிக்கைகள் போன்றவற்றால் வெளியிடப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வெளியிடப்படாத ஆக்கம், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என்பவற்றிலிருந்து பெற்ற தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் எளிய புள்ளிவிபரவியல் மாதிரிகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும

தென்மராட்சிப் பிரதேசம் ஆனது யாழ் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 23 வீதத்தினை தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பிரிவு 221 சதுரகிலோ மீற்றர் பரப்பளவினை கொண்டுள்ளது. இவ்வாய்வுப் பிரதேசத்தில் 20,647 குடும்பங்கள் அதாவது மொத்த சனத்தொகையில் 70,860 பேர் விவசாய உற்பத்தியில் ஈடுபடுபவர்களாக காணப்படுகின்றனர். யுத்தத்திற்குப் பின்னர் விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு பின்வரும் சாதகமான சூழல்களே (வாய்ப்புக்கள்) பிரதான காரணமாகும்.

## விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல் என்பவற்றிற்கான வாய்ப்புக்கள

தென்மராட்சி பிரதேசம் விவசாயத்துக்கு உகந்த பௌதீக அம்சங்களை கொண்டுள்ளது. அதாவது மிதமான வெப்பநிலை (31, பருவக்காற்று, மழைவீழ்ச்சி (295mm) மற்றும் விவசாயத்துக்கு ஏற்ற தட்டையான தரைத்தோற்றம் உடைய மேட்டுநிலம் (4,265ha) என்பன விவசாயத்துக்கு ஆதரமாக உள்ளது. கிணற்று நீரைப் பயன்படுத்தி பன்னிரண்டு மாதங்களும் பொருத்தமான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இத்தகைய

புவியியல் காரணிகள் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வாய்ப்பாக காணப்படுகின்றன.

## வர்த்தக விவசாய முயற்சிகள்

கிராமிய விவசாயத்தினை பொறுத்த வரையில் தென்மராட்சியில் வர்த்தக முயற்சியிலான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் அதாவது உற்பத்தி நோக்குடன் விவசாயத்துறையில் பாரிய முதலீடுகளைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இத்தகைய வினைத்திறன் வாய்ந்த விவசாயிகள் விவசாயத்தில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற நவீன விவசாய உபகரணங்களான அறுவடை இயந்திரம், உழவு இயந்திரம் மற்றும் நவீன களை கொல்லி மருந்து வகைகள் விளைச்சலை அதிகப்படுத்தும் நவீன பசளைகள் போன்றவற்றை பயன்படுத்தி ஆர்வத்துடன் ஈடுபடுகின்றமை விவசாயத்தினை வர்த்தகமயப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

கமநல சேவை நிலையங்களின் செயற்பாடு யுத்த காலங்களைவிட தற்போது வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் செயற்படுவதாக 85 சதவீதமான விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் கமநல சேவை நிலையங்களினால் சிறு தானியத்திற்கு 9.52 சதவீதமும் நெல் உற்பத்திக்கு 85.71 சதவீதமும் மரக்கறிகளுக்கு 4.76 சதவீதமும் உர மானியம் வழங்கப்படுகின்றது. மேலும் கிருமிநாசினிகள், உள்ளீடுகள், விவசாய உபகரணங்கள் என்பவற்றின் விலைகளும் குறைவடைந்துள்ளதுடன் இவற்றை விரைவாக பெறக்கூடிய நிலைமையும் காணப்படுகின்றது.

## விவசாய ஆராட்சி மற்றும் விரிவாக்கல் சேவை நிலையங்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாய சம்மேளனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை விவசாயிகளுக்கு ஆலோசனைகள், தகவலகள், பயிற்சிவழங்கல், விவசாய விஸ்தரிப்பு சேவைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றமை விவசாயிகளுக்கு வாய்ப்பாக காணப்படுகின்றது. விவசாய உள்ளீடுகளை நியாமான விலையில் பங்கீடு செய்தல், ஆராய்ச்சி உதவிகள் வழங்குதல் போன்றவற்றினையும் விவசாயத்திற்கு ஆற்றி வருகின்றமை விவசாயிகளுக்கு பெரும் பலமாக உள்ளது.

## அதிகரித்த ஊழிய நிரம்பல்

ஆய்வுப் பிரதேசமானது கிராமிய துறையில் அமைந்த பிரதேசம் ஆகும். இங்கு 60 சதவீதத்திற்கு மேற்பட்டோர் விவசாயத்தொழிலை மேற்கொள்ளுபவர்களாக காணப்படுகின்றனர். இதனால் விவசாய நடவடிக்கைகளுக்கு ஊழியத்தினை பெற்றுக் கொள்ள முடிவதும் கிராமிய விவசாயத்தினை வர்த்தகமயப்படுத்துவதற்கு பலமாக அமைகின்றது. மேலும் அறுவடை காலங்களில் கூலித்தொழிலாளர்கள் ஏனைய மாவட்டங்களான அம்பாறை, மட்டக்களப்பில் இருந்து இப்பிரதேசத்திற்கு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாயம் சார் கைத்தொழில்கள்

விவசாயம் சார்ந்த கைத்தொழில் நடவடிக்கையானது விவசாயத்தை ஊக்குவிக்கும் காரணியாக உள்ளது. அதாவது பழரசம், மரக்கறி பதனிடுதல் மற்றும் பொதி செய்து விற்பனை செய்யும் நடவடிக்கை போன்றவற்றிற்கு விவசாய விளைபொருட்கள் உள்ளீடுகளாக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் விவசாய பொருட்களுக்கான கேள்வி 2009ஆம் ஆண்டிற்கு பின் 50 சதவீதத்தைவிடவும் கூடுதலாக உயர்வடைந்துள்ளது.

## சமாதான சூழலும் உற்பத்திக்கான வாய்ப்புக்களும்

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்த யுத்தத்தினால் விவசாயப் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. அத்துடன் தென்மராட்சி மக்கள் காலத்துக்கு காலம் இடம்பெயர்வுகளை சந்தித்தனர். இதனால் அவர்களின் சொத்துக்களும் உடமைகளும் பாதிக்கப்பட்டன. மேலும் பல்லாயிரக்கணக்கான மக்களது உயிர்களும் பறிக்கப்பட்டது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் குடாநாடு ஏனைய மாவட்டங்களுடன் தரைவழித் தொடர்பை கொண்டிருக்கவில்லை. அதாவது A9 வீதி மூடப்பட்டிருந்ததனால் ஏனைய மாவட்டங்களுடனான தொடர்பு முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது நிலவும் சமாதானச் சூழல் நாட்டின் எப்பாகத்திலும் விவசாய பொருட்கள் தங்குதடையின்றி அனுப்பக்கூடியதாக இருக்கின்றது. நாட்டின் நிச்சயமான சூழல் நிலவுவதால் விவசாயிகளின் முதலீட்டுக்கான வாய்ப்பாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு

விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களும் இதர கூட்டுறவு அமைப்புக்களும் இதற்குள் அடங்குகின்றன. இவற்றின் ஊடாக சந்தைப்படுத்துவதனையே நிறுவன ரீதியான சந்தைப்படுத்தல் எனக் கூறப்படுகின்றது. ஜீவனோபாய மட்டத்தில் வாழும் விவசாய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொடுப்பது, நுகர்வோருக்கு மலிவு விலையில் தரமான பொருட்களை வழங்குவது என்ற அடிப்படை நோக்கங்களுடன் அதாவது அபிவிருத்தி நோக்கிய பதிலீட்டு நடவடிக்கையை மேற்கொள்வது என்ற நோக்கில் இத்தகைய நிறுவனங்கள் விளைபொருட்களை கொள்வனவு செய்ய மொத்த கொள்வனவு நிலையங்கள், அறுவடைக்காலங்களில் தற்காலிக கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் யுத்த காலத்தில் அத்தியாவசிய உணவு மற்றும் ஏனைய உதவிகளை வழங்கின. இத்தகைய உதவி அத்தகைய சூழலில் அவசியமாகவே காணப்பட்டது. ஆயினும் பின்னர் தோன்றிய சமாதான சூழலானது மேற்படி நிறுவனங்களின் உதவி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாய உள்ளீடுகள், விவசாய உபகரணங்கள் போன்ற அடிப்படையில் வழங்கப்பட்டன. இவ்வகையான உதவிகளில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. இவைதவிர தென்மராட்சியில் விவசாயம் தொடர்பில் கரித்தாஸ், திவிநெகும, GTZ, FORUT CARE, FAO, UNDP, போன்ற நிறுவனங்களும் பல்வேறு உதவி நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் விவசாய முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கினறன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் “திவிநெகும” திட்டமானது வாழ்வின் எழுச்சியை நோக்கமாக கொண்டது. “நிறைவான இல்லம் - வளமான தாயகம்” என்ற தொனிப்பொருளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இவ்நிகழ்ச்சித் திட்டமானது மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நாடாளவிய ரீதியிலான கிராமிய விவசாய அபிவிருத்தி திட்டமான திவிநெகும திட்டமானது யாழ் மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயிகளிடம் பாகல் விதை, பயிற்றை விதை, மிளகாய் விதை, தக்காளி விதை, பூசணி விதை, வெள்ளரிக்காய் விதை போன்ற இன்னோரன்ன விதையினங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு அவர்களது வீட்டுத்தோட்டச்செய்கைக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. “திவிநெகும” நான்காவது சட்டம் 2012ல் தென்மராட்சிப் பிரதேச பிரிவில் அமைந்துள்ள கிராகசேவகர் பிரிவில் உள்ள விவசாயிகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விதையினங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குடும்ப பொருளாதாரத்தையும் போஷாக்கையும் மேம்படுத்தும் 50, 000 மனைப் பொருளாதாரங்களை உருவாக்கும் தேசிய வெயற்றிட்டமான திவிநெகும திட்டத்தின் மூலம் தென்மராட்சிப்பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபடும் 50 சதவீதமானவர்களும் நன்மைகளை அனுபவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்படி யுத்தத்திற்குப் பின்னரான சூழல்கள் அல்லது வாய்ப்புக்கள் வசதிகள் காரணமாக விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல்களில் உயரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை விவசாய உற்பத்தி யுத்தத்திற்கு முன்னர் எவ்வாறு காணப்பட்டது எனவும் தற்கால சமாதான சூழலில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் காண்பிக்கின்றது.

**அட்டவணை 1.
தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாய உற்பத்திகளின் போக்கு**

| உற்பத்திப் பொருட்கள் | 2007/2008 | | 2011/2012 | |
|---|---|---|---|---|
| | பரப்பு (ha) | உற்பத்தி (mt) | பரப்பு (ha) | உற்பத்தி (mt) |
| நெல் | 4,221 | 6,270 | 4,375 | 9,811 |
| பயிற்றை | 49 | 531 | 53 | 564 |
| பாகல் | 46 | 459 | 55 | 531 |
| பூசணி | 20 | 264 | 21 | 301 |
| மிளகாய் | 145 | 230 | 191 | 353.8 |
| முருங்கை | 02 | 35 | 64 | 98 |
| கத்தரி | 25 | 150 | 28 | 190 |
| மாம்பழம் | 05 | 262 | 182 | 390 |
| பப்பாசி | 15 | 148 | 07 | 199 |
| தேசிக்காய் | 03 | 100 | 22 | 340 |

மூலம்: சாவகச்சேரி, கைதடி கமநலசேவைகள் திணைக்களம

தென்மராட்சி பிரதேசத்தில் யுத்தத்திற்கு முந்திய (2007/2008), பிந்திய (2011/2012), நிலையில் விவசாய உற்பத்தியினை பார்க்கும் போது யுத்த காலப்பகுதியில் சகலவிதமான விவசாய உற்பத்திகளுக்காக பயன்படுத்தப்பட்ட பரப்பளவும், உற்பத்தியும் குறைவடைந்து காணப்படுகின்றது. அதாவது விவசாய நிலங்கள் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டமை, A9 வீதி முடப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் உற்பத்திப்பொருட்களை வேறு மாவட்டங்களுக்கு சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் யுத்தம் நிறைவடைந்த தற்போதைய அமைதியான சூழ்நிலையில் உரப்பாவணை, உழவு இயந்திரப் பாவணை, தரமான விதையினங்கள் கிடைக்கின்றமை மற்றும் உற்பத்திப் பொருட்களை வேறு மாவட்டங்களுக்கு விற்பனை செய்யக் கூடிய சூழ்நிலை காரணமாக சகலவிதமான விவசாய உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் நிலப்பரப்பின் அளவும், உற்பத்தியும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் யுத்த காலப்பகுதியில் விவசாயிகள் சிறந்த விலையினைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் யுத்தத்தின் பின்னர் சாதகமான வாய்ப்பு வசதிகள் அதிகரித்ததன் விளைவாக மிக உயர்வான விலையினைப் பெறக்கூடிய சூழல் காணப்படுகின்றது. பின்வரும் அட்டவணை யுத்தத்திற்கு முன்னரும், பின்னரும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையின் நிலைமைகளை வெளிப்படுத்துகின்றது.

**அட்டவணை 2.**
**தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலைகள்**

| பொருட்கள் | 2008 | | 2012 | |
|---|---|---|---|---|
| | அளவு (kg) | விலை (Rs) | அளவு (kg) | விலை (Rs) |
| நெல் | 70 | 1350 | 70 | 1700 |
| பாகல் | 01 | 80 | 01 | 100 |
| பூசணி | 01 | 60 | 01 | 80 |
| மிளகாய் | 01 | 130 | 01 | 260 |
| முருங்கை | 01 | 100 | 01 | 180 |
| கத்தரி | 01 | 80 | 01 | 110 |
| பயிற்றை | 01 | 70 | 01 | 110 |
| பப்பாசி | 01 | 40 | 01 | 60 |
| தேசி | 01 | 40 | 01 | 90 |
| மாம்பழம் | 01 | 15 | 01 | 30 |
| பலாப்பழம் | 01 | 70 | 01 | 150 |
| வாழைப்பழம் | 01 | 40 | 01 | 90 |

மூலம்: சாவகச்சேரி, கைதடி கமநலசேவைகள் திணைக்களம

யுத்தத்திற்கு முன்னர் உற்பத்திப்பொருட்களை யாழ் மாவட்டத்திற்குள்ளேயே உடனடியாக சந்தைப்படுத்தக்கூடிய இக்கட்டான சூழ்நிலை காணப்பட்டது. காரணம் விவசாயப்பொருட்கள் விரைவில் பழுதடையக்கூடியவை அத்துடன் உடனடியாக சந்தைப்படுத்த முடியாத நிலைமை. சந்தை விரிவாக்கம் இன்மையால் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைவடைந்தே காணப்பட்டது. ஆனால் தற்போது யுத்தம் நிறைவடைந்த காலப்பகுதியில் வேறு மாவட்டங்களுக்கு விற்பனை செய்யக்கூடிய நிலைமை அதாவது சந்தை விரிவாக்கம் காரணமாக விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு கேள்வி அதிகரித்து விலையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகளின் வருமானங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஊரடங்குச்சட்டம், இராணுவச் சோதனைச்சோதனைகள், இராணுவ அச்சுறுத்தல்கள் போன்றவற்றின் காரணமாக சந்தைப்படுத்தல் மிகவும் பின்தங்கிக் காணப்பட்டன. இதனால் விவசாய விளைபொருட்கள் அதிகளவில் கால்நடைகளுக்கு உணவாக வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. என்றாலும் யுத்தம் முடிவுக்கு வந்து 2009ம் ஆண்டின் பின்னரான சூழ்நிலையில் இராணுவ நெருக்கடிகள் நீக்கப்பட்டதுடன் ஏனைய பிரதேசங்களை இணைக்கும் பாதைகளும் திறக்கப்பட்டதன் காரணமாக உள்ளூர் சந்தைகளில் மட்டுமின்றி வெளியூர் சந்தைகளுக்கும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டன. யுத்தத்தின் முடிவின் பின்னரான சூழ்நிலையில் வர்த்தகர்களின் சுரண்டல் தன்மையும் 10 சதவீதமாக குறைவடைந்துள்ளதை ஆய்வின் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. அதாவது வெளிப்பிரதேசத்தில் இருந்து வருகை தரும் வர்த்தகர்களுக்கும் தமது விளைபொருட்களை அனுப்புவதாலும் விளைபொருட்களுக்கான கேள்வி சந்தையில் முன்னரைவிட 50 சதவீதமாக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது நெல் மற்றும் சிறு தானியங்கள் என்பனவற்றை அரசசார்பற்ற நிறுவனங்களும் கொள்வனவு செய்கின்றன. குறிப்பாக கரித்தாஸ், அகதிகள் புனர்வாழ்வுநிலையம் என்பன குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள

### நிலப் பயன்பாடு

விவசாய நிலங்களில் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் பிரதான பிரச்சினையாக காணப்படுகின்றது. இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருத்தல், அபிவிருத்தி திட்டங்களின் கீழ் புதிய கட்டிடங்கள் அமைத்தல் போன்ற காரணங்களினால் விவசாய நிலங்களை உச்ச அளவில் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் இராணுவத்தினர் தமது காவலரண்களை விவசாயிகளின் காணிகளில் அமைத்திருப்பதனால் விவசாயிகளினால் அவர்களுடைய நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

### கண்ணிவெடிகள்

தென்மராட்சிப் பிரதேசமானது பல தடவைகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. யுத்தத்தின் போது புதைக்கப்பட்ட மிதிவெடிகள் ஆங்காங்கே காணப்படுகின்றது. விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடியானது விவசாய நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது. இத்தகைய நிலக் கண்ணிவெடிகள் போன்ற ஆபத்துக்கள் விவசாய நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு தடையாக உள்ளது.

### நோய்த்தாக்கம்

விவசாய நடவடிக்கைகளில் பொதுவாக நிலவும் அச்சுறுத்தல்களிலொன்று பயிர்களுக்கு ஏற்படும் நோய்த்தாக்கமாகும். வர்த்தக மயப்படுத்தப்பட்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் நோய்த்தாக்கங்கள் பரவும் போது பயிர் அழிவதனால் நட்டமடைகின்றனர். சூழல் மாசடைவதனால் ஏற்பட்டு வரும் மாற்றங்களினால் புதிய நோய்கள் பரவுவதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். எல்லா நோய்களுக்கும் கிருமிநாசினிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நோய்கள் ஏற்பட்டு அவற்றை ஆய்வு செய்து மருந்தினைக் கண்டுபிடிப்பதற்கு 2-3 வருடங்கள் செல்வதனால் நோய்பரவுவதனை உடனடியாக கட்டுப்படுத்த முடியாது உள்ளது. இவ்வாறான நோய்த்தாக்கம் கிராமிய விவசாயத்தினை வர்த்தக மயப்படுத்துவதற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

## விவசாயக் கடன்களை பெறும் போது எதிர்கொள்ளப்படும் சவால்கள்

விவசாயிகள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான பணத்தினை வெவ்வேறுபட்ட தரப்பினரிடம் இருந்து கடனாக பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆய்வுப்பிரதேச மக்கள் விவசாயம், கால்நடை, மீன்பிடி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகையில் ஏற்படுகின்ற நிதி நெருக்கடிகளின் போது நிறுவனரீதியான மூலங்கள், நிறுவனரீதியற்ற மூலங்களிலிருந்து கடனைப் பெற்றுக்கொள்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கி என்பன ஆய்வுப் பிரதேசத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்கக்கூடிய நிறுவனரீதியான மூலங்களாகும். மாறாக உறவினர்களும், நண்பர்களும், மரபுரீதியாக வட்டிக்கு பணம் கொடுப்போர் நிறுவனரீதியற்ற மூலங்களாக காணப்படுகின்றனர்.

பொதுவாக விவசாயிகள் பெறும் மொத்தக் கடனில் நிறுவனரீதியான மூலங்களின் பங்களிப்பு 35 சதவீதம் மாத்திரமேயாகும். நிறுவனரீதியற்ற மூலங்களின் பங்களிப்பு 65 சதவீதமாகும். இவற்றில் உறவினர்களும், நண்பர்களும் 55 சதவீத பங்களிப்பையும் வட்டிக்கு பணம் வழங்குவோர் 10 சதவீத பங்களிப்பையும் வழங்கியுள்ளனர்.

விவசாயிகளினது பயிர்கள் அழிவடைந்த சந்தர்ப்பத்தில் அவர்களிடமிருந்து கடன்களை மீளப்பெற முடியாத அபாயம் காணப்படுவதனால் விவசாயம் சார்ந்த கடன்களை வங்கிகள் மிகவும் இறுக்கமாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதனால் மொத்தக் கடனில் 13.75 சதவீதக் கடன்கள் மாத்திரமே விவசாயக் கடன்களாகும். அடகுக் கடனின் பங்களிப்பு 10 சதவீதமாகும்.

வட்டிக்கு பணம் கொடுப்போரின் பங்களிப்பு மொத்தக் கடனில் 10 சதவீதமாகும். ஆனால் வருடாந்த வட்டிவீதம் 36 – 50 சதவீதத்திற்கடைப்பட்ட அளவில் காணப்படுகின்றது. எனவே விவசாயிகள் கூதலான வட்டி மாத்தரமன்றி கடன் பெறுவதற்காக நீண்ட நாட்களாக அலைய வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. அத்துடன் வங்கிகளினால் வழங்கப்படுகின்ற கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு 6 மாத காலம் மாத்திரம் வழங்கப்படுவதனல் விவசாய நடவடிக்கைகள் அழிவடையும் சந்தர்ப்பத்தில் கடனை மீளச் செலுத்த முடியாத இக்கட்டான நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர்.

## சந்தைப்படுத்தல

உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது கடன் அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டியிருக்கின்றது. வியாபாரிகளுக்கு வழங்கப்படும் விளைபொருட்களுக்கான கழிவு விவசாயிகளை கடுமையாக பாதிக்கின்றது. விற்கப்படும் பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப தரகுப் பணத்தினையும் விவசாயிகளே வழங்க வேண்டியுள்ளது. அத்துடன் பொருட்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு வாகனச்செலவும் ஏற்படுகின்றது. இத்தகைய காரணிகளும் வர்த்தகமயப்படுத்தலுக்கு தடையாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். விவசாய உற்பத்திகள் நுகர்வோரை சென்றடைவதற்கிடையில் களஞ்சியப்படுத்தல், பொதிகளாக்கும் செலவு, சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டில் ஈடுபடும் தொழிலாளர் செலவு, தரகுக் கூலி, சந்தை குத்தகை வரி, கொண்டு செல்லும் செலவு போன்ற பல செலவுகளை விவசாயிகள் எதிர்கொள்கின்றனர்.

மேலும், மட்டுவில், மறவன்புலவு, கச்சாய், கைதடி, மீசாலை, சரசாலை, கெற்பேலி, கிளாலி பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கைகளை சந்தைப்படுத்துவதற்கு கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாண சந்தைகள் மாத்திரமே காணப்படுகின்றன. அதாவது தமது இருப்பிடங்களில் இருந்து ஏறத்தாழ 8-15 கிலோமீற்றா வரை பயணம் செய்யவேண்டும். இதனால் சந்தைகளுக்கு கொண்டு செல்லும் போது போக்குவரத்துச்செலவு ஏற்படுவதோடு பொருட்களை எடுத்துச் செல்லும் போது சேதமடைகின்றது. மற்றும் மொத்தமாக விற்பனை செய்யும் போது சில்லறை வியாபாரிகள் கடனடிப்படையிலும் கொள்வனவு செய்கின்றார்கள். விவசாயிகள் தமது பொருட்களை தரகர்கள் மூலம் வாத்தகமயப்படுத்தும் போது தரகுப்பணம் செலுத்தவேண்டிய நிலையிலும் காணப்படுகின்றனர். எனவே சந்தைப்படுத்தும் போது இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

தென்மராட்சி சந்தைகளில் பொதுவாக வியாபாரிகள், நுகர்வோர்கள் தமது உற்பத்திகளை காலை எட்டுமணிக்கு முன்னர் நிரம்பல் செய்யும் பட்சத்தில் உயர்விலையைப் பெற முடியும். இதனால் தூர இடங்களில் உள்ள விவசாயிகள் பொதுவாக நெல்லியடி உடுப்பிட்டி, மறவன்புலவு, கைதடி, நாவற்குளி, பளை போன்ற இடங்களிலிருந்து வரும் விவசாயிகள் நியாயமான விலைகளைப் பெறமுடியாத துரதிஷ்ட நிலை காணப்படுகின்றது.

## முடிவுரை

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவினை மையப்படுத்திய இவ்வாய்வாய்வின் அடிப்படையில் மிதமான வெப்பநிலை, பருவக்காற்று, மழைவீழ்ச்சி மற்றும் விவசாயத்துக்கு ஏற்ற தட்டையான தரைத்தோற்றம் போன்ற புவியியல் காரணிகளும், விவசாய ஆராட்சி மற்றும் விரிவாக்கல் சேவை நிலையங்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை, விவசாயம் சார் கைத்தொழில்கள் அதிகரித்துள்ளமை, அதிகரித்த ஊழிய நிரம்பல் A9 வீதி திறக்கப்பட்டதனால் சந்தைப்படுத்தும் வசதிகள் அதிகரித்துள்ளமை, அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புக்கள் உயர்வடைந்துள்ளமை போன்ற ஏனைய காரணிகளும் ஆய்வுப் பிரதேசத்தில் விவசாய உற்பத்திகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை உயர்வடையச் செய்துள்ளது. இதனால் சகலவிதமான விவசாய உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் நிலப்பரப்பின் அளவும், உற்பத்தியும் அதிகரித்துள்ளதுடன் உற்பத்திப்பொருட்களுக்கான விலையும் அதிகரித்துள்ளது. இத்தகைய நிலைமைகள் ஏழை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கச்செய்து வாழ்க்கைத்தரத்தையும் முன்னேற்றமடையச்-செய்துள்ளது.

என்றாலும், இராணுவ காவலரண்கள் அமைக்கப்படுவதன் விளைவாக விவசாயிகள் முழுமையாக தங்களுடைய நிலங்களைப் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது, மற்றும் கடுமையான நோய்த்தாக்கம், விவசாயக் கடன்களை பெறுவதில் கடுமையான சிரமங்கள் காணப்படுகின்றமை, நிறுவனரீதியற்ற மூலங்களிலிருந்து பெறப்படும் கடன்களுக்கு மிக உயர்வான வட்டி, நிறுவனரீதியான மூலங்களிலிருந்து இலகுவில் கடன்கள் பெறமுடியாமை, தூர இடங்களில் உள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் போன்றன விவசாயகளால் இன்னும் எதிர்கொள்ளப்படும் சவால்களாகும். உற்பத்தியாளர்கள் கடன் அடிப்படையில் சந்தைப்படுத்த வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இதனால் கொள்வனவாளர் கடனை திருப்பி செலுத்தும் ரோபது தவணை அடிப்படையிலும் காலதாமதமாகவும் பணத்தினை செலுத்துகின்றனர். அத்துடன் சந்தைப்படுத்தலின் போது தரகுப்பணம், போக்குவரத்துச்செலவு உற்பத்திப் பொருட்கள் பழுதடையும் தன்மை என்பனவும் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் உற்பத்தியாளர் பாரிய நட்டத்தினை அனுபவிக்கின்றனர்.

எனவே, யுத்தத்தின் பின்னரான தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல் என்பவற்றில் முன்னேற்றம் காணப்பட்டபோதும், சவால்களையும் விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர். இத்தகைய சவால்களை முறியடிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

## References

அமிர்தலிங்கம். கோ (2008) "*இலங்கைப் பொருளாதாரம்*", கொழும்பு, பூபாலசிங்கம்புத்தகசாலை.

AhamedLebbe, S.M (2004*) Policy Impacts on paddy Agriculture in Srilanka- Then and Now*: Proceedings of the Workshop on Contemporary Social Issues in Srilanka: Faculty of Arts & Culture South Eastern Univercity of Srilanka

AhamedLebbe, S.M (2010*) Paddy Farmers in Sri Lanka: A Study of Living Standard,* Unpublished Ph.D. Thesis, Department of Economics, University Madras, India.

Central Bank of Sri Lanka (2010), Annual Report, Sri Lanka.

Norton, G. W.and Alwang, J. ( 1963). "Introduction to Economics of Agricultural

Development" McGraw –Hill, ink.

Todaro, M.P.(2000). Economic Development, 7th Edi. Longman. Inc. London.

Udith K. Jayasinghe-Mudalige(2006): *Role of Food and Agriculture Sector in Economic Development of Sri Lanka: Do We Stand Right in the Process of Structural Transformation?*: Department ofAgribusinessManagement,Faculty of Agriculture and Plantation Management, Wayamba University of Sri Lanka.

WWW.statstics.gov.lk/agriculture/index.htm

WWW.agriinfomedia.com/group/naturefarming

(http://makkalsakthi.net/index)

(http://ta.wikipedia.org/s/5vx)

(http://ta.wikipedia.org/wiki).